INSTITUTE FOR HEALTH POLICY

72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## ஊடக அறிவிப்பு

**திகதி வரை தடையாணை**

திகதி : 24 October 2024
நேரம் : 10:00 AM Sri Lanka Time

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info ‘at’ ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi ‘at’ ihp.lk ட்விட்டர் : @ravirannaneliya

# ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் செப்டெம்பர் மாதத்தில், 41% இலங்கையர்கள் நாடு சரியான திசையை நோக்கிச் செல்வதாக கூறுகின்றனர்

*ஜனாதிபதித் தேர்தல் நாட்டின் போக்கைப் பற்றிய பொது மக்களின் கண்ணோட்டத்தில் பெரிய திருப்பம் ஏற்பட வழிவகுத்துள்ளது*

2024 செப்டம்பர் மாதத்திற்கான SLOTS கருத்துக்கணிப்பில் நாடு செல்லும் திசையைப் பற்றிய இலங்கையர்களின் கருத்து குறிப்பிடத்தக்க முறையில் மேம்பட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முந்தைய வாரங்களில், நாடு தவறான திசையில் செல்வதாக நிகர மதிப்பாக 43% பொதுமக்கள் கருதினர். தேர்தலுக்குப் பிறகு இது தலைகீழாக மாறியது. மாதத்தின் கடைசி பத்து நாட்களில் நாடு சரியான திசையை நோக்கிச் செல்வதாக நிகர மதிப்பாக 5% இலங்கையர்கள் கூறியுள்ளனர். இது ஏப்ரல் 2022 இல் SLOTS இன் தொடரி ஆரம்பித்தது முதல், தொடர்ந்த மிக உயர்ந்த மட்டமாகும்.




ஒட்டுமொத்தமாக செப்டெம்பர் மாதத்தில், நாடு சரியான திசையை நோக்கிச் செல்வதாக சராசரியாக 21% வயது வந்தவர்கள் நினைத்தனர். இதோடு ஒப்பிடுகையில், நாடு தவறான திசையை நோக்கிச் செல்வதாக 54% நினைத்தனர். செப்டம்பர் 21 ஆம் திகதி தேர்தலுக்கு முந்தைய காலக்கட்டத்தில், நாடு சரியான திசையை நோக்கிச் செல்வதாக 16% நினைத்தனர். மேலும் இது தேர்தலுக்குப்பிறகு 41% ஆக அதிகரித்தது. அதேவேளை, தேர்தலுக்கு முன் 59% நாடு தவறான திசையை நோக்கிச் செல்வதாக நினைத்தனர், இது தேர்தலுக்குப்பின் 36% ஆகக் குறைந்தது.

கருத்தில் ஏற்பட்ட இந்தக் குறிப்பிடத்தக்கத் திருப்பமானது செப்டம்பர் 21 ஆம் திகதி நடந்த தேர்தலுக்குப் பிறகு உடனடியாக நிகழ்ந்தது. செப்டம்பர் 22-23 காலப்பகுதியில் SLOTS நேர்காணல்களை நடத்தவில்லை, எனினும் செப்டம்பர் 24 ஆம் திகதி முதல் கருத்துக்கணிப்பு மீண்டும் தொடங்கியவுடன் உணர்வுகளில் மாற்றம் தெளிவாகவும் உடனடியாகக் கண்டறியக்கூடியதாகவும் இருந்தது.

நாட்டின் திசையைப் பற்றிய பொதுமக்களின் கருத்துகளில் ஏற்பட்ட முன்னேற்றம் பரவலாகவும் அனைத்து மக்கள்தொகை குழுக்கள் மத்தியிலும் காணப்பட்டது. மிகப்பெரிய முன்னேற்றங்கள் வயது வந்தவர்களில் வரியவர்கள் மத்தியிலும் (+77%) மற்றும் இள வயதினரிடையேயும் (18-29 வயதினர் +74%, 30-44 வயதினர் +77%), சிங்கள (+75%) மற்றும் முஸ்லிம் (+74%) பதிலளிப்பவர்கள் மத்தியிலும் காணப்பட்டது. நாடு செல்லும் திசையைப் பற்றிய அபிப்பிராயத்தின் நிகர மதிப்பில் நிறைகணிய மாற்றத்தைக் காணாத ஒரே மக்கள்தொகை குழு, இலங்கையர்களில் மூன்றில் ஒரு பங்கு செல்வந்தர்கள் மட்டுமே. இவர்களில் 6% நாடு தவறான திசையில் செல்கின்றது என்று நினைத்தனர்.

இலங்கையில் நடந்த பெரிய கருத்து மாற்றத்தின் காரணமாக, தேர்தலுக்கு முன்பாக நாட்டின் திசையைப் பற்றி நினைக்கையில் மிகவும் நம்பிக்கையற்ற கருத்துடைய நாடுகளில் ஒன்றாக இருந்த இலங்கையர்களை, தேர்தலுக்குப் பிறகு மிகவும் நன்றான கருத்து உடைய நாடுகளில் ஒன்றாக மாற்றியது. 2024 செப்டம்பர் மாதத்திற்கு முன்னர், பிற நாடுகளுடன் ஒப்பிடுவதற்காக "தெரியாது" என்ற பதில்களை தவிர்த்தபோது, 90% ற்கும் அதிகமான இலங்கையர்கள் நாடு தவறான தடத்தில் இருப்பதாக நம்பினர். 29 நாடுகளை

உள்ளடக்கிய உலகளாவிய IPSOS(இப்சோஸ்) கருத்துக்கணிப்பின் செப்டம்பர் மாத மதிப்பீடுகளின்படி, சராசரியாக 61% வயது வந்தவர்கள் தங்கள் நாடு தவறான திசையை நோக்கி செல்வதாக நினைத்தனர். ஒப்பிட்டுப் பார்த்தால், இலங்கையில் 79% தேர்தலுக்கு முன்னர் இந்தக் கருத்தைக் கொண்டிருந்தனர், இந்த சதவீதம் தென் கொரியா மற்றும் ஜப்பானை விட அதிகமானது, ஆனால் தொடர்ந்த ஏனைய தெற்காசிய நாடுகளைவிட மிகவும் பின்தங்கியது. தேர்தலுக்குப் பிறகு, இந்த சதவீதம் 32% ற்கு (சரியான திசையில் என்று 68%) குறைந்தது. இது நன்று (நிறைகணிய) என்ற கண்ணோட்டத்துடனான முதல் மூன்று நாடுகளுக்குள் இலங்கையை நகர்த்தியது.

## மேலும் விவரங்கள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, October 2024, “41% of Sri Lankans say the country is heading in the right direction in September after the Presidential Election”. *Available at:* https://ihp.lk/research-updates/41-sri-lankans-say-country-heading-right-direction-september-after-presidential

## IHP பற்றி

இலங்கை சுகாதார நிறுவனம் (IHP) இலங்கையின் சுகாதாரம் மற்றும் சமூக நிலைமைகள் மற்றும் மக்களின் கருத்துக்களில் ஏற்படும் மாற்றங்களை கணிப்பதற்காக SLOTS கருத்துக்கணிப்பை இலங்கை சுகாதாரம் மற்றும் வயோதிப ஆய்வு (SLHAS) கூட்டமைப்பின் சார்பாக நடத்துகின்றது. இந்த கூட்டமைப்பு இலங்கை கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்கள் அடங்கியது. இந்த கருத்துக்கணிப்பை ஆணையிடுவதற்கும் வடிவமைக்ககவும் IHP மட்டுமே பொறுப்பு, மேலும் இதற்கு முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறது. IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு, இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் மூன்று தசாப்தங்களாக பல கருத்துக்கணிப்புகளை நடத்தியுள்ளார்.

## முறை

SLOTS ஆனது, முழுமையாக நோக்குமிடத்து நாடு செல்லும் போக்கைப்பற்றி பொதுமக்களின் கண்ணோட்டத்தை கருத்துக்கணிப்பு செய்யும் பொருட்டு மக்களிடம் கேட்கும் கேள்வி: *“பொதுவாக, நாட்டில் விடயங்கள் சரியான திசையில் அல்லது தவறான திசையில் செல்கிறது என்று சொல்வீர்களா?*". பதிலளிப்பவர்கள் பதிலளிக்காமல் இருக்கவோ அல்லது "தெரியவில்லை/உறுதியில்லை" என்று சொல்லவோ அனுமதிக்கப்படுகிறார்கள். நாடு சரியான அல்லது தவறான திசையில் நகர்கிறது என்று கூறும் சதவீதங்கள் நேர்காணல் செய்யப்பட்ட அனைவரையும் அடிப்படையாகக் கொண்டவை, எனவே தெரியாது மற்றும் மறுப்புகளினால் சரியான மற்றும் தவறான தடங்களுக்கான கூட்டுத்தொகை 100% ஆக இருக்காது.

மாதிரி சார்புகளைக் குறைக்க, மதிப்பீடுகள் வயது, பாலினம், துறை, இனக்குழு, மதம், கல்வி, சமூக பொருளாதார நிலை தரவரிசை மற்றும் இருப்பிடம் ஆகியவற்றிற்கான தேசிய மக்கள் தொகையுடன் பொருந்தும்விதத்தில்

எடையிடப்பட்ட பதிலளிப்பவர்களை அடிப்படையாகக் கொண்டவை. ப்ரொபென்சிட்டி வெயிட்டிங்(propensity weighting) மற்றும் மறுமுறை விகிதாசார பொருத்துதல் (ரேக்கிங்) மூலம் எடை கணிக்கப்படுகிறது.

## நிதியுதவி

IHP, இலங்கையின் சுகாதாரம், சமூக நிலைமைகள் மற்றும் மக்களின் கருத்துக்களில் ஏற்படும் மாற்றங்களை கணிப்பதற்காக □□□□□ கருத்துக்கணிப்பை நடத்துகின்றது. கருத்துக்கணிப்பை உருவாக்க, ஆணையிட மற்றும் வடிவமைக்க IHP மட்டுமே பொறுப்பாகும், மேலும் அதற்கான முழுப் பொறுப்பையும் IHP ஏற்றுக்கொள்கின்றது. பேட்டிகள், IHP ஊழியர்களால் தினமும் தொலைபேசியினுடாக நடத்தப்படுகின்றன. இது தேசிய கள ஆய்வு மூலம் ஆட்சேர்க்கப்பட்ட அல்லது எழுமாறாக தொடர்புகொள்ளப்பட்ட கையடக்கத் தொலைபேசி அழைப்புகளை உள்ளடக்கிய பதிலளிப்பவர்களுடன் நடாத்தப்படுகின்றது. SLOTS களப்பணியானது 2021 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நிதியுதவியாளர்களால் ஆதரிக்கப்படுகின்றது. இவர்கள் கேள்வி வடிவமைப்பு, தரவுப் பகுப்பாய்வு அல்லது அறிக்கையிடல் ஆகியவற்றில் எந்தப் பங்கையும் வகிப்பதில்லை. முன்பு, நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (Neelan Tiruchelvam Trust), ஆசியா மன்றம் (Asia Foundation), ஐரோப்பிய ஆணையகம் (European Commission), ஐக்கிய இராச்சியத்தின் உடல் நலப் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK National Institute for Health and Care Research), ஓபன் சொசையட்டி அறக்கட்டளை நிறுவனம் (Foundation Open Society Institute) மற்றும் ஏனையவர்கள் நிதியளித்துள்ளனர். தற்போதைய கள வேலைகளை வேலக்ஸ் ஸ்டிப்டங் அறக்கட்டளை(Velux Stiftung Foundation), நியூயார்க் பல்கலைக்கழகம் அபுதாபி (New York University Abu Dhabi), யு .எஸ். எயிட் (USAID) மற்றும் IHP பொது நலன் ஆராய்ச்சி நிதி ஆகியன நிதியளித்துள்ளன. மேலும் ஆய்வின் முடிவுகள் மற்றும் IHP அறிக்கைகள், முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் கருத்துக்கள் அல்லது நிலைகளை பிரதிபலிப்பதில்லை. மேலும் விரிவான தரவு மற்றும் முடிவுகளைப் பெற விரும்புவோர் IHP நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம்.